

**Madurai Symposium 2007**

**Advancing Development**

**Building Alliances**

**24-29 September**



செய்தியறிக்கை

செப்டம்பர் 29, 2007

# மதுரை கூடலரங்கம் 2007இல் நடைபெற்ற பல்வேறு கருத்தரங்குகளின் தீர்மானத் தொகுப்புகள்

## குண்டாறு வயலகப் பேரிணையத்தின் தீர்மானங்கள்

1.மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி, விருதுநகர் உள்ளிட்ட தென் தமிழக மாவட்டங்களில் பாய்கின்ற குண்டாறு, அதன் வடிநிலப்பகுதியில் வாழும் உழவர்களுக்கும், பொதுமக்களுக்கும் அடிப்படை வாழ்வாதாரமாகத் திகழ்கின்றது. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கண்மாய்களுக்கும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊரணிகளுக்கும் தண்ணீர் வழங்கக்கூடிய மூலமாகவும் விளங்குகின்றது. தானம் அறக்கட்டளையோடு இணைந்து, நடுவண், மாநில நீர் வள மற்றும் வேளாண் அமைச்சகங்கள், நபார்டு போன்ற நிறுவனங்கள் குண்டாறு வடிநிலப்பகுதியின் மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளித்து தொடர்ச்சியான பங்காற்ற வேண்டும்.

2.குண்டாறு வயலகப் பேரிணையம், நடுவண், மாநில அரசுகள் மற்றும் வளர்ச்சி நிறுவனங்கள் இணைந்து குண்டாறு வடிநிலப்பகுதிகளுக்கான சிறப்பு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு 20 ஆண்டிற்கான சிறப்பு செயல்திட்டத்தினை வகுக்க வலியுறுத்துகிறது. ஒவ்வொரு ஐந்தாண்டிலும் வெவ்வேறு வடிநிலப்பகுதிகளில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டும். இதற்காக ரூ.1000 கோடி ஒதுக்க வேண்டும் என்றும் பேரிணையம் வலியுறுத்துகிறது.

3.வடிநிலப்பகுதியில் உள்ள கண்மாய்களைச் சங்கிலித் தொடர் மூலம் நீர் வழி இணைப்புச் செய்து, அவ்வப்பகுதி உடமையாளர்களாலும், பொதுமக்களாலும் பராமரிக்கப்பட வேண்டும். தற்போது உருவாக்கப்படும் கண்மாய் தொடர்பான திட்டங்களில் சங்கிலித் தொடர் நீர் வழி இணைப்பு முறை புறக்கணிக்கப்படுகிறது. இதனால் கண்மாய் உள்ளிட்ட நீ'ராதாரங்களை முழுப் பயன்பாட்டிற்கு உட்படுத்த இயலுவதில்லை. குண்டாறு வடிநிலப்பகுதி மட்டுமன்றி, பிற ஆற்றுப்படுகையிலும் பழைய சங்கிலித் தொடர் முறையைக் கொண்டு வருதல் வேண்டும்.

4.அனைத்து வயலக அமைப்புகளும் தங்கள் பகுதிகளில் உள்ள நீராதாரங்கள் மற்றும் வரத்துக் கால்வாய்களைச் சீரமைக்க தத்தமது உறுப்பினர்களை ஈடுபடுத்தும் என்பதை இப்பேரிணையம் பெருமையுடன் அறிவிக்கிறது.

5.கண்மாய் மேம்பாட்டுத் திட்டங்களை அரசு அறிவிக்கும்போது, கண்மாய் உழவர் கூட்டமைப்புகளை நிறுவி அவைகளுக்கே முன்னுரிமை அளிக்க வேண்டும்.

6.நீராதார மேம்பாட்டுப் பணிகளை குண்டாறு வடிநிலப்பகுதிகளில் மேற்கொள்ளும்போது, ஒருங்கிணைந்த அணுகுமுறையினை மக்கள் நிறுவனங்கள் வாயிலாக செயல்படுத்த வேண்டும். அதேபோன்று அரசு, ஒப்பந்ததாரர்கள் மூலமாக மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு பேரிணையம் அறிவுறுத்துகிறது.

7.தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிறுவனம் மற்றும் நபார்டு ஆகியவை சிறப்பு மேம்பாட்டுத் திட்டங்களை குண்டாறு நீர்வடிப்பகுதிகளில் செயல்படுத்த வேண்டும்.

8.வயலகக் கூட்டமைப்புகளும், வயலக இயக்கமும் இணைந்து குண்டாறு வடிநிலத்தைச் சார்ந்த பிற பகுதிகளிலும் வயலக அமைப்புகளை உருவாக்கி, வலுப்படுத்துவதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

9.நீர்நிலைகளில் ஆக்கிரமிப்புச் செய்பவர்களுக்கான அரசு இயற்றியுள்ள சட்டத்தை வலுப்படுத்துவதோடு, ஆக்கிமிப்புகளே இல்லாத நீர்நிலைகள் உருவாவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

## இந்திய நீராதாரங்கள் சார்ந்த சுயசார்பு மக்கள் பேரிணையக் கருத்தரங்கு தீர்மானங்கள்

1.இந்திய நீராதாரங்கள் சார்ந்த சுயசார்பு மக்கள் பேரிணையம் தேசிய அளவில் பதிவு செய்யப்படும் என தீர்மானிக்கப்படுகிறது.

2.நீர் ஆதார பாதுகாப்புக்காக தொடங்கப்படும் அனைத்து மக்கள் அமைப்புகளும், இந்திய நீராதாரங்கள் சார்ந்த சுயசார்பு மக்கள் பேரிணையத்தில் உறுப்பினராக சேர்க்கப்படுவர் எனவும் இந்த பேரிணையத்தை தானம் அறக்கட்டளை வழிநடத்தும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

3.பேரிணையத்தில் இணைய தகுதியுடைய அனைத்து உறுப்பினர் மற்றும் மக்கள் அமைப்புகள் நுழைவுக் கட்டணமாக முறையே ரூ.100ம் ஆண்டு சந்தாவாக ரூ.250 மட்டும் செலுத்துவது என்றும், மேலும் ஆண்டுதோறும் தங்களது உறுப்பினர் பதிவினை மறு பதிவு செய்ய வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

4.நீர் நிலை சார்ந்த ஒவ்வொரு அமைப்பும் இதன் பொதுக்குழு உறுப்பினர்களாகக் கருதப்பட்டு அதன் பொறுப்பாளர்களில் ஒருவர் பொதுக்குழுவில் கலந்து கொண்டு செயல்படும் வகையில் இதன் அமைப்பு முறைகள் செயல்படும் என தீர்மானிக்கப்படுகிறது.

5.மானாவாரி பகுதியில் செயல்படுத்தப்படும் நவப்ரா, நபார்டு மற்றும் ஒருங்கிணைந்த நீர்வடிபகுதி மேம்பாட்டுத் திட்டங்களில் அப்பகுதியில் உள்ள கண்மாய்கள், வரத்துக்கால்வாய்கள், ஊரணிகள் மற்றும் குட்டைகள் ஆகிய நீராதாரங்களையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த நீராதாரங்களின் அடிப்படையிலான பகுதி மேம்பாடு என்ற அடிப்படையில் திட்டங்களை செயலாக்க வேண்டும்.

6.நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டத்தில், பொதுவான வழிகாட்டு அம்சங்களை அனைத்து பகுதிகளிலும் ஒரே மாதிரியான அணுகுமுறையில் செயலாக்காமல் அந்தந்த சூழலுக்கேற்ப குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை நில வகைப்பாடுகளுக்கேற்ப அப்பகுதிகளின் சிறப்பு வளர்ச்சிப் பிரச்சனைகள் அடிப்படையிலான நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்களை வடிவமைக்க வேண்டும் என இக்கருத்தரங்கு அரசு மற்றும் இதர நிறுவனங்களை கேட்டுக் கொள்கிறது.

7.நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீட்டில் ஒரு ஹெக்டேருக்கு ரூ.6,000 என்ற அளவினை மறு பரிசீலனை செய்து ஒரு ஹெக்டேருக்கு ரூ.10,000லிருந்து ரூ.12,000 என ஒதுக்குவதை அரசு பரிசீலிக்க வேண்டும் என இக்கருத்தரங்கு கேட்டுக் கொள்கிறது.

8.நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதற்கான கால வரையறையை 8லிருந்து 10 ஆண்டுகள் என்பதாக அதிகப்படுத்த வேண்டும். பல வளர்ச்சி நிறுவனங்கள் ஒன்றிணைந்து ஒருங்கிணைந்த செயல்பாடுகளை ஊக்குவிக்க வேண்டும் என இக்கருத்தரங்கு கேட்டுக் கொள்கிறது.

9.நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ஏற்கனவே உள்ள திட்டக் கூறுகளுடன் மக்களின் வாழ்க்கை பாதுகாப்பு, கால்நடைப் பாதுகாப்பு, பயிர்ப்பாதுகாப்பு போன்றவற்றிர்கான காப்பீட்டுத்திட்டம், அனைவர் மத்தியிலும் சேமிப்பு மற்றும் கடன் திருப்பி செலுத்தும் பழக்கவழக்கங்களை ஏற்படுத்தி நிலைத்தன்மையை ஏற்படுத்த குறுநிதி குழுக்களை ஏற்படுத்துத்தல். அவற்றை வங்கிகளுடன் இணைத்து கடனுதவி பெறுதல் மற்றும் இதர விசயங்களையும் ஒருங்கிணைந்து செயலாக்குவதே

நீர்வடிப்பகுதி அமைப்புகளின் நீடித்த வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என இக்கருத்தரங்கு தீர்மானிக்கிறது.

## மானாவாரி விவசாயிகள் சம்மேளனத்தின் தீர்மானங்கள்

1. மானாவாரி விவசாயத்தை ஒரு நம்பகமான தொழிலாக மாற்றுவதை லட்சியமாகக் கொண்டு, இதற்காக மக்கள் அமைப்புகள் நிறைய உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டது.

2. தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய உழவர் குழுக்கள் மற்றும் உழவர் மன்றங்களை ஒருங்கிணைத்து உழவர் மாமன்றங்களாக உருவாக்கி, அதனை வலுப்படுத்தி உழவர் மாமன்றங்களின் மூலமாக மானாவாரி விவசாய குடும்பங்களின் வருமானத்தை அதிகரிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

3. வேளாண்மைப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து செயல்பட்டு பகுதிக்கேற்ற மானாவாரி தொழில்நுட்பங்களை கண்டுபிடித்து அதனை விவசாயிகள் கடைப்பிடிக்க ஆவண செய்ய முடிவு எடுக்கப்பட்டது.

4. மானாவாரி விவசாயிகளின் உள்ளூர்/பாரம்பரிய தொழில்நுட்பங்களுக்கு மதிப்பு கொடுத்து அதனை ஊக்குவிக்கவும் முடிவெடுக்கப்பட்டது.

5. மானாவாரி விவசாயத்துடன் உப தொழில்களான கால்நடை வளர்ப்பு, மரப்பயிர்கள் மற்றும் பழப்பயிர்கள் வளர்ப்பு போன்றவற்றை இணைத்து அதன் மூலம் குடும்ப வருமானத்தை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

6. அரசு திட்டங்களுடன் இணைந்து சீர்திருத்தப் பணிகளை மேற்கொண்டு, தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்ற வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

7. நிலச்சீர்திருத்தப் பணிகளை மக்கள் அமைப்புகள் மூலமாக மக்கள் பங்குத்தொகையுடன் நிறைவேற்றவும், இதனை தானம் அறக்கட்டளை வழிநடத்தும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## மூலிகை உற்பத்தியாளர் மற்றும் சேகரிப்போருக்கான கருத்தரங்கத் தீர்மானங்கள்

1.மூலிகை சேகரிக்கும் பணியில் உள்ள பெரும்பாலானோர் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்பவர்களாக உள்ளனர். அவர்களை சுயஉதவிக்குழுக்களில் உறுப்பினர்களாகச் சேர்த்து சேமிப்பு, கடன் மற்றும் காப்பீட்டுத் திட்டங்களில் இணைப்பதன் வாயிலாக ஏழ்மையிலிருந்து விடுபடச் செய்ய இயலும். மூலிகை சேகரிப்போருக்காக சிற்றூர் அளவிலான சங்கங்களை அமைத்து அப்பகுதிகளில் கிடைக்கும் அரிய மூலிகைத் தாவரங்களை பாதுகாக்க வேண்டும்.

2.சுயஉதவிக்குழுக்களைச் சார்ந்த மூலிகை சேகரிப்போரின் அன்றாடத் தொழில் நசிவடையாத வண்ணம், அரசு, அவர்களுக்குத் தேவையான நிதி மற்றும் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி ஊக்குவிக்க வேண்டும். மேலும், வனத்துறையால் வழங்கப்படும் மூலிகை சேகரிப்பு ஒப்பந்தங்களைப் பெறுவதற்கும் அனுமதியை வழங்க வேண்டும்.

3.மருந்து தயாரிப்பு நிறுவனங்கள், மூலிகை சேகரிக்கும் சுயஉதவிக்குழுவினருடன் இணைந்து மூலிகைச் செடிகள் பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் கட்டுமானத்திற்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்க வேண்டும். மேலும் மூலிகை சேகரிப்போருக்கு விதை வங்கி மற்றும் பாதுகாப்புக் கிடங்குகளை உருவாக்கிக் கொடுக்க முன் வர வேண்டும்.

4.உள்ளூர் வங்கிகள் மூலிகை சேகரிப்போருக்கு தொழிற் கடன் வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். அரசு இவர்களுக்குத் தேவையான திட்டங்களை வடிவமைத்து தொடர்ந்து செயல்படுவதற்கான சூழலை உருவாக்க வேண்டும்.

5.மூலிகை சேகரிப்போர் சங்கமானது, மருந்து தயாரிப்பு நிறுவனங்களோடு இணைந்து தங்களது உறுப்பினர்களுக்கு தர நிர்ணயம் குறித்த பயிற்சிகளை வழங்க வேண்டும்.

## பஞ்சாயத்து பிரதிநிதிகள் மாநாட்டுத் தீர்மானங்கள்

8. பஞ்சாயத்து நிர்வாகத்தின் முக்கிய அங்கங்களான கிராம சபை, பஞ்சாயத்து மன்றக் கூட்டங்கள், பணிக்குழுக்களின் கூட்டங்கள், பஞ்சாயத்துத் தேர்தல் போன்ற முக்கிய இனங்களுக்கு உரிய அந்தஸ்தும் முக்கியத்துவமும் கிடைக்க வகை செய்தல்.

9. இந்திய அரசியல் சட்டம் 11வது அட்டவணையில் பரிந்துரைத்துள்ளபடி 29 வகையான துறைகளுக்கான பணம், பணியாளர், பணிகள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

10. வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பஞ்சாயத்து நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களாக்கப்படுதல் வேண்டும். அதன் மூலம் வளர்ச்சித் திட்டங்களாலும் பஞ்சாயத்து நிறுவனங்கள் வாயிலாக செயல்படுத்தப்படுதல் வேண்டும்.

11. பஞ்சாயத்து தேர்தல்களில் நலிவுற்ற பிரிவினர்க்கு (பெண்கள், SC, ST) இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு அவர்களுக்குத் தேவையான திறன் மேம்பாட்டிற்கான பயிற்சிகள் வழங்குவதைக் கட்டாயமாக்குதல் வேண்டும்.

12. கிராமங்களில் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணியை பஞ்சாயத்துக்கள் மேற்கொள்ளும் நிலையில் அவற்றில் மக்களின் பங்களிப்பு ஒவ்வொரு பணியிலும் கட்டாயமாக்கப்படுதல் வேண்டும்.

13. பஞ்சாயத்துத் தேர்தல்கள் மூன்று நிலைகளிலும் அரசியல் சார்பின்றி நடைபெற சட்டம் கொண்டு வருதல் வேண்டும்.

14. பஞ்சாயத்துக்களுக்கு மாநில அரசு நிதி ஒதுக்கும்போது அந்தந்தப் பஞ்சாயத்துக்களின் ஆண்டுத்திட்டங்களை கவனத்தில் கொண்டு அந்த திட்டங்களின் குறிக்கோளை அடையும் விதத்தில் நிதி வழங்குதல் வேண்டும்.

15. பஞ்சாயத்துத் தலைவர் பஞ்சாயத்து நிர்வாகத்தின் செயல் அலுவலர் என்ற அந்தஸ்திலும் செயல்படுவதால் அவருக்கு ஊதியம் வழங்குவதை மாநில அரசு கட்டாயமாக்க வேண்டும்.

16. தேர்வு செய்யப்பட்டுள்ள பஞ்சாயத்துப் பிரதிநிதிக்களுக்கிடையே வட்டார அளவில், மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் இணையம் ஏற்படுத்துவது எனத் தீர்மானிக்கப்படுகிறது.

17. பஞ்சாயத்துப் பிரதிநிதிகளின் அனுபவங்களை பிரதிபலிக்கும் வகையிலும் தேவையான கொள்கை மாற்றங்களை வலியுறுத்தியும் அவ்வப்போது மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்வது என தீர்மானிக்கப்படுகிறது.

18. பஞ்சாயத்து நிறுவனங்களுக்கு தேவையான நிர்வாகத்திறன் மேம்பாட்டிற்காக ஒவ்வொரு மாவட்டங்களிலும் தன்னாட்சி அந்தஸ்து பெற்ற ஆதார மையம் ஏற்படுத்துதல் வேண்டும்.

19. இந்த தீர்மானங்களை மாநில, மத்திய அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்லக்கூடிய ஒரு பிரதிநிதித் குழு ஏற்படுத்தவும் இந்தக் குழுவின் வாயிலாக மாநில மற்றும் மத்திய அரசின் கவனத்திற்கு இந்த தீர்மானங்களை கொண்டு செல்லவும் தீர்மானிக்கலாயிற்று.

## சமூக அமைப்புகளின் பேரிடர் நிர்வாகக் கருத்தரங்கத் தீர்மானங்கள்

1. தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கடலோரக் கிராமங்களிலும் பேரிடர் மேலாண்மை குழுக்கள் பிரத்யேகமாக ஏற்படுத்துவது, அதன் செயல்பாடுகளை வலுப்படுத்துவது. இவ்வமைப்புகள், ஏதுவான பிற நிறுவனங்களின் தொடர்பை மேம்படுத்தி கிராம அளவில் பேரிடர் தற்காப்பு முறைகளை சிறப்பாக நிர்வகிக்கும்.

2. சமூகத்தில் காலங்காலமாக பின்பற்றப்பட்டு வரும் பேரிடர் மேலாண்மை முறைகளையும் யுக்திகளையும் வெளிக்கொணரும் விதமாக இந்த ஆண்டில் உரிய வெளியீடுகள் கொண்டு வருவது.

3. ஒவ்வொரு பஞ்சாயத்து அளவிலும் ஆபத்துக்கால நிதி ஏற்படுத்துவது மற்றும் அதை முறையாக நிர்வகிப்பது. மேலும் உள்ளூர் அளவில் தேவையான பசுமைத் தடுப்பு நடவடிக்கைகளை பொதுமக்களே மேற்கொள்வது.

4. கடலோரத்தில் வாழும் அனைத்து மக்களும் ஆயுள் காப்பீடு மற்றும் மருத்துவக் காப்பீடுத் திட்டத்தில் அங்கம் பெற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது.

5. பேரிடர் மேலாண்மையை சிறப்பாக செயல்படுத்தும் விதமாக சுய உதவிக் குழுக்களுக்கிடையே ஒரு இணையம் ஏற்படுத்தி அதன் மூலம் கூட்டு முயற்சிகளை மேற்கொள்வது.

6. கடலோர சமூகத்தினருக்கு பேரிடர் மேலாண்மை சம்பந்தமாக போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக 6 மாதங்களுக்கு ஒரு முறை போதிய பயிற்சிகள் வழங்குவது. குறிப்பாக பள்ளிக்குழந்தைகளுக்கு பேரிடர் மேலாண்மை சம்பந்தமான கல்வி வழங்குவது.

7. கடலோர மாவட்டங்களில் இந்த ஆண்டின் இறுதிக்குள் மாவட்ட அளவில் பேரிடர் மேலாண் ஆதார மையங்கள் ஏற்படுத்துவது. அதன் செயல்பாடுகளை வலுப்படுத்தும் விதமாக பஞ்சாயத்துக்களை அதில் பங்கேற்கச் செய்வது.

8. NIDM, CMFRI அண்ணா பல்கலைக்கழகம் போன்ற பேரிடர் நிர்வாக சம்பந்தமான ஆதார நிறுவனங்களுடன் கிராம அளவு பேரிடர் மேலாண் அமைப்புகளுக்கு தொடர்பு ஏற்படுத்துவது.

## பெண்கள் சுயஉதவிக்குழுக் கூட்டமைப்புகளின் பேரிணையத்தின் தீர்மானங்கள்

1.பெண்கள் சுயஉதவிக்குழுக் கூட்டமைப்புகள் அனைத்தும் தங்களுக்கான தெளிவான இலக்குகளையும், தொலைநோக்குப் பார்வையினையும் கொண்டிருக்க வேண்டும். தங்கள் உறுப்பினர்களுக்கிடையே நல்ல புரிதலை ஏற்படுத்தி கூட்டமைப்புகளோடு இணைந்து செயல்படும்



Madurai Symposium 2007
Advancing Development
Building Alliances
24-29 September



தன்மையை ஏற்படுத்த வேண்டும். அடுத்த கட்ட தலைமையை உருவாக்கும் வண்ணம் கூட்டமைப்புகளின் தொலைநோக்கு அமைய வேண்டும்.

2.கூட்டமைப்புகளின் தலைவிகள் தங்களின் பொறுப்புகள், கடமைகளை உணர்ந்தவர்களாகவும், காலந்தவறாமை, வெளிப்படையான தன்மை கொண்டவர்களாக உருவாக்கப்படுதல் வேண்டும். நேர்மை, நாணயம், கண்ணியம் போன்ற பண்புகளோடு பிற உறுப்பினர்களுக்கு முன்மாதியான தலைவிகளாக அவர்கள் திகழ வேண்டும்.

3.சனநாயக மனப்பான்மை கொண்டவராகத் திகழ்வதோடு, தலைமைக்கு தானே முன் வந்து பொறுப்பேற்கும் இயல்பினை உடையவராகவும் இருக்க வேண்டும்.

4.தங்களது பொறுப்புகளை பிற உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்துவதோடு, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை புதிய தலைவிகள் பொறுப்பிற்கு வரும் வண்ணம் வழிகாட்டுதல் வேண்டும்.

மேற்காணும் செய்தியை தங்கள் நாளேட்டில் வெளியிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

தங்களன்புள்ள

இரா.சிவக்குமார்
ஊடக ஒருங்கிணைப்பாளர்